# 9 பிற்காலத் தோத்திரப்பாடல்கள்

பன்னிரு திருமுறைகளுக்குப் பின்னர் இறை அடியார்கள் இறைவன் மீது பிரபந்தங்களாகவும் தனிப்பாடல்களாகவும் பல தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளனர். அவை பிற்காலத் தோத்திரப் பாடல்கள் என அழைக்கப்படுகின்றன.

பிற்காலத் தோத்திரப்பாடல்களில் கந்தபுராணம், திருப்புகழ், கந்தர் அனுபூதி, சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, பராபரக்கண்ணி முதலானவை பற்றி அறிவோம்.

## (அ) கந்தபுராணம்

கந்தபுராணம் வடமொழியிலுள்ள சிவசங்கர சங்கிதையைத் தழுவி பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களால் தமிழில் பாடப்பட்டதாகும். இதனை கச்சியப்ப சிவர்சாரியார் தமிழ் இலக்கிய மரபுகளைப் பேணிப் பாடியுள்ளார்.

முருகனின் பிறப்பு, வளர்ப்பு, திருவிளையாடல், சூரபத்மனுடன் நிகழ்த்திய போர், தெய்வயானை திருமணம், வள்ளி திருமணம் பற்றி விரிவாகப் பாடிய புராணம் கந்தபுராணம் ஆகும். இது தொடர்பான மேலதிக விடயங்களைச் சமய இலக்கியம்(கந்த புராணம்) என்ற பகுதியில் கற்போம்.

கந்தபுராணத்தின் உற்பத்தி காண்டத்தில் உள்ள ''அருவமு முருவு மாகி'' என்ற பாடலை இங்கு கற்போம்.

**''அருவமு முருவு மாகி அநாதியாய்ப் பலவா யொன்றாய்**
**பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்**
**கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே**
**ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலக முய்ய''.**

**பதவுரை:** அருவம்- உருவம் அற்றது, உருவம் இல்லாதது; உருவம்- வடிவம்; சோதி- ஒளி; மேனி- திருமேனி; கருணை-இரக்கம், அருள்; கரம்-கை; உதித்தல்- தோன்றுதல்.

**பொழிப்புரை:** (கண்ணுக்குத் தெரியாத) உருவமற்ற அருவமாகவும் (கண்ணுக்குத் தெரியும்) வடிவமாகவும் அநாதியாகவும் பலவாகவும் ஒன்றாகவும் பிரமமாகவும் நின்ற ஒளிப்பிழம்பு ஒரு திருமேனியாக (உடம்பாக) வடிவெடுத்து அது அருள் பொழியும் ஆறு திருமுகங்களையும் பன்னிரு கைகளையும் உடையதாய் உலகம் உய்யும் பொருட்டு ஒப்பற்ற திருமுருகனாக வந்து தோன்றியது.

## (ஆ) திருப்புகழ்

தோத்திரப் பாடல்களுள் திருப்புகழும் அடங்கும். இந்நூல் சந்தப்பாடல்களால் பாடப்பட்ட 16,000 பாடல்களைக் கொண்டதாகும்.

அருணகிரிநாதரால் பாடப்பட்ட திருப்புகழ் முருகக் கடவுளின் பெருமைகளை விரிவாகப் போற்றுகிறது.

**'வாக்கிற் கருணகிரி'** என்னும் சிறப்பு திருப்புகழால் அருணகிரிநாதருக்கு ஏற்பட்டது. ஆழ்ந்த பொருள் அமைதி, பொருளுக்கேற்ற சந்தம், தடையில்லா நடை, இசையின்பம், தாளக்கட்டு ஆகிய இத்தனைக்கும் திருப்புகழ் நிலைக்களமாக உள்ளது.

**தத்தனா தானனத் தனதான**

"பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே."

**பதவுரை:** பலகால்- எப்பொழுதும்; முத்தியே- மோட்சம்; பெருவாழ்வு- சிறந்த வாழ்வு; சேர்தல்- அடைதல் சற்குணம்- நற்குணம்; ஒப்பில்லா- நிகரில்லாத; வித்தகன்- ஞானி.

**பொழிப்புரை:** பக்தி பூண்டு நான் உன்னை எப்பொழுதும் உள்ளத்தில் தியானித்து சிறப்பு வாய்ந்த உனது திருப்புகழ்களைப் பாடுகிறேன். ஞானநிலை பெற்றவனாக மாற்றி, என்னை பெருவாழ்வாகிய முத்தி நிலையை அடைய அருள் புரிவாயாக. உத்தமனே! ஈகைக்குணமுள்ள நற்குணத்தவர்களுக்கு நேசனே! நிகரில்லாத சிறந்த மணிக்கிரி வாசனே! வித்தகா! ஞான பக்குவம் அடைந்தவர்களுக்கு அனுக்கிரக சக்தியாய்ப் பதிகின்றவனே! வெற்றி வேலாயுதத்தை ஏந்தும் பெருமாளே! முத்தியை அடைய அருள் புரிவாய்.

## (இ) கந்தர் அநுபூதி

அருணகிரிநாதரால் பாடப்பட்ட மற்றுமொரு பாடற்றொகுதி கந்தர் அநுபூதியாகும். முருகப் பெருமானிடம் இம்மை, மறுமைப் பேறுகளை வேண்டாது வெறுத்து, மெய்யுணர்வும், வீடுபேறும் வேண்டிப் பாடிப் பரவுதலை நோக்காகக் கொண்டு இந்நூலை அருணகிரிநாதர் பாடியுள்ளார்.

இந்த நூலின் இறுதிப்பாடலாக அமையும் **“உருவாய் அருவாய்”** என்னும் பாடல் முருகனின் அருள் வேண்டிப் பாடுவதற்கு உகந்ததாகும்.

**“உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்**
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்**
**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே”**

**பதவுரை:** உருவாய்- உருவத் திருமேனி உடையவரும்; அருவாய்- அருவத் திருமேனி உடையவரும்; உளதாய்- உண்டென்று போற்றுபவர்களுக்கு உள்ள பொருளாக உணரப்படுபவரும்; இலதாய்- இல்லை என்று கூறுபவர்களுக்கு இல்பொருளாக இருப்பவரும்; மருவாய் மலராய்- மணமாயும் இணைந்துள்ள மலர் போலவும் (உயிரும் உணர்வுமாய் ஒருங்குற்று நிற்பவரும்); மணியாய் ஒளியாய்- மணி(மாணிக்கம்)யும் அதன் ஒளியும் போலவும் எல்லாவற்றிலும் அகலாது நின்று பிரகாசிப்பவரும்; கருவாய் உயிராய்க்- கருவில் உருவமாகவும் அதன் உயிருமாகவும்; கதியாய்- உயிர் உடலை விட்டுப் பிரிந்த பின் செல்லும் நரகம், பூமி, சுவர்க்கம் முதலான கதிகளாகவும்; விதியாய்- மேற்படி இடங்களுக்கு உயிரைச் செலுத்தும் விதியெனும் காரணராகவுள்ளவரும்;; குருவாய் வருவாய்- உயிர்களின் பக்குவம் பார்த்து குருவின் வடிவமாகவும் வருபவரும்; அருவாய்- மல பந்தங்களில் உள்ள உயிர்களுக்கு

வினைப்பயனாகவும் மல பந்தங்களில் நீங்கிய உயிர்களுக்கு முத்திப் பேறாகவும் அருள் புரிபவனே; குகனே- உயிர்களின் உள்ளக் குகையில் இருக்கும் முருகப்பெருமானே!

**பொழிப்புரை:** உருவத் திருமேனியுடன் தோன்றுபவரும் அதனைத் தவிர அருவமாய், சர்வ வியாபியாக உள்ளவரும், உண்டென்று போற்றுபவர்களுக்கு உள்ள பொருளாக உணரப்படுபவரும் இல்லை என்று கூறுபவர்களுக்கு இல் பொருளாக மறைந்து நிற்பவரும் மணியும் அதன் ஒளியும் போலவும் அனைத்திலும் சேர்ந்து நின்று பிரகாசிப்பவரும் கருவும் அதனுடனுள்ள உயிர் போலவும், உயிர் செல்லும் நரகம், பூமி, சுவர்க்கம் முதலான கதிகளாகவும் பிறப்பும் அதற்கு ஏதுவான விதி என்னும் காரணராக உள்ளவரும் பக்குவமடைந்த உயிர்களுக்குக் குருவாக வருபவரும், வினைப் பயனையும் இறுதியிலே முத்திப் பேற்றையும் அருள் புரியும் குகனே, எமக்கும் வேண்டத்தக்கது அருள்வாயாக.

## (ஈ) சகலகலாவல்லி மாலை

சகலகலாவல்லிமாலை, சரஸ்வதி தோத்திரம் எனவும் வழங்கப்படும். இப்பிரபந்தம் குமரகுருபரரால் கலைமகளின் அருளை வேண்டிப் பாடப்பட்டது. மாணவர்களாகிய நீங்களும் சரஸ்வதி தேவியைப் போற்றும் இப்பாடலைப் படித்துப் பயன் பெற வேண்டும்.

சகலகலாவல்லிமாலைப் பிரபந்தத்தின் ஆறாவதாக அமைவது 'பண்ணும் பரதமும்' என்ற பாடலாகும்.

**"பண்ணும் பரதமும் கல்வியுந்**
**தீஞ்சொற் பனுவலும்யான்**
**எண்ணும் பொழுதெளி தெய்தநல்**
**காயெழு தாமறையும்**
**விண்ணும் புவியும் புனலுங்**
**கனலும் வெங்காலுமன்பர்**
**கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்**
**சகல கலாவல்லியே."**

**பதவுரை:** பண்- இசைக்கலை; பரதம்- நாடகம், நடனக்கலை; யான்- அடியேன்; எண்ணுதல்- நினைத்தல்; நல்குதல்- அருள் செய்தல்; எழுதாமறை- வேதம்; விண்-ஆகாயம்; புவி- மண்; புனல்- நீர்; கனல்- நெருப்பு; வெங்காலும்- கொடிய காற்றும்; கருத்து- எண்ணம்; நிறைந்தாய்- கலந்து நிறைந்திருத்தல்; நல்குதல்- அருள் செய்தல்; சகலகலாவல்லி- சகல கலைகளும் தனது திருவுருவமாக அமையப் பெற்ற பூங்கொடி போன்ற சரஸ்வதி.

**பொழிப்புரை:** கலைவடிவமாக விளங்கும் சகலகலாவல்லியே! வேதங்களிலும், விண், மண், நீர், நெருப்பு, கொடிய காற்று என்னும் ஐம்பூதங்களிலும், அன்பர்களின் கண்களிலும், எண்ணங்களிலும், (எல்லாப் பொருள்களிலும்) நிறைந்துள்ளவளே! இசை, நாடகம், நடனம், என்பவற்றுடன் ஏனைய கலைகளும், ஆகியவற்றை விளக்கும் இனிய சொற்களால் அமைந்த நூல்களும், அவற்றை அடியேன் வேண்டுமென நினைக்கின்ற வேளையில் எளிதாக அடையும்படி எமக்கு அருள் செய்வாயாக.

**விளக்கம்:** கலை வடிவமாகக் கடவுளை நினைத்து வணங்குபவர்களுக்குக் கலைகள் கைகூடும். அதனை நாமும் பின்பற்றிப் பயன் பெறுவோம்.

## (உ) அபிராமி அந்தாதி

தேவி பக்தரான அபிராமிப்பட்டர் என்பவரால் பாடப்பட்ட பாடல்த்தொகுதி அபிராமி அந்தாதி ஆகும். அதில் அந்தாதித் தொடராக நூறு பாடல்கள் உள்ளன. அவை சொல்நயம், பக்தி நயம் மிக்கவை. அபிராமி அந்தாதிப் பாடல்களை ஓதுதலினால் கிடைக்கும் பயனை அதன் இறுதிப்பாடல் கூறுகிறது.

**"ஆத்தாளை யெங்க ளபிராம**
**வல்லியை யண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம் பூநிறத்**
**தாளைப் புவியடங்கக்**
**காத்தாளை யங்குச பாசாங்**
**குசமுங் கரும்புமங்கை**
**சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழு**
**வார்க்கொரு தீங்கில்லையே."**

**பதவுரை:** ஆத்தாளை- உலக மாதா; அண்டம்- உலகம்; பூத்தாள்- படைத்தவள்; அம்குசம்- அழகிய தாமரை மலர்; பாசம்- கயிறு; அங்குசம்- தோட்டி; காத்தவள்- காக்கின்றவள்; முக்கண்ணி- மூன்று கண்களை உடையவள்.

**பொழிப்புரை:** அபிராமவல்லி எங்கள் தாய். அவள் எல்லா உலகங்களையும் படைத்தவள். மாதுளம் பூப்போலும் நிறமுடையவள். உலகம் எல்லாவற்றையும் காப்பவள். அழகிய கரங்களில் தாமரை, மலர், பாசம், அங்குசம், கரும்புவில் என்பவற்றை வைத்திருப்பவள். அவள் மூன்று கண்களை உடையவள். அந்த அம்பிகையைத் தொழுகின்ற அடியவர்களுக்கு ஒரு தீங்கும் உண்டாக மாட்டாது.

## (ஊ) பராபரக் கண்ணி

பராபரக்கண்ணி என்னும் தோத்திரப்பாடலைத் தாயுமானவர் பாடியுள்ளார். அவர் தென் இந்தியாவில் விஜயரங்க சொக்கநாதரிடம் அமைச்சராக இருந்தவர். அந்தப் பதவியையும் பொருட்படுத்தாது ஞானநிலை பெற்றார், பதவியைத் துறந்தார்.

தாயுமானவர் பராபரக்கண்ணியில் சைவசமய, தத்துவ உண்மைகளைக் குறிப்பிடுகிறார். அவரது பாடல்கள் மிக உயர்ந்த நிலையில் நின்று பாடப்பட்டவையாகும். அத்துடன் மிக நுட்பமான உண்மைகள் எல்லாம் இரண்டு அடிப்பாடல்களில் தெளிவாக விளங்குமாறும் பாடப்பட்டுள்ளது. பராபரக்கண்ணியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஐந்து கண்ணிகளைக் கற்போம்.

1. **சிந்தித்த வெல்லாமென் சிந்தையறிந் தேயுதவ**
**வந்த கருணை மழையே! பராபரமே!**

**பதவுரை:** சிந்தித்தல்- நினைத்தல் , சிந்தை- மனம், கருத்து, உதவ- அருள, கருணை- அருள்.

**பொழிப்புரை:** அடியேன் நினைத்த எல்லாவற்றையும் எனது கருத்தறிந்து அருள் செய்யும் பொருட்டு எழுந்தருளி வந்த அருள் மழையே! பராபரமே!

2. **வந்தித்து நின்னை மறவாக் கடனாகச்**
**சிந்திக்க நின்னதருள் செய்யாய்! பராபரமே!**

**பதவுரை:** வந்தித்தல்- வணங்குதல், கடன்- கடமை, சிந்திக்க- நினைக்க, அருள்- திருவருள்.

**பொழிப்புரை:** தேவரீரை வணங்கி மறவாதிருத்தலையே கடனாகக் கொண்டு, தேவரீரையே நினைந்திருக்கத் திருவருள் செய்ய வேண்டும் பராபரமே!

3. **எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்**
**றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே!**

**பதவுரை:** எவ்வுயிர்-எத்தன்மையான சிற்றுயிர், எண்ணுதல்-நினைத்தல், இரக்க-அவ்வுயிர்களுக்கு இரங்க.

**பொழிப்புரை:** பராபரமான இறையே! எத்தகைய சிற்றுயிர்களையும் எனது உயிர் போன்று நினைத்து, அவ்வுயிர்களுக்கு இரங்குமாறு தெய்வத்தன்மை பொருந்திய திருவருளாகிய கருணை செய்தல் வேண்டும்.

**4. கெட்டவழி யாணவப்பேய் கீழாக மேலான சிட்டருனைப் பூசை செய்வார். பராபரமே!**

**பதவுரை:** கெட்டவழி- தீயநெறி, ஆணவம்- மும்மலங்களில் ஒன்றான மூலமலம், கீழாக- அதன் சக்தி கெட, சிட்டர்- மேலான அடியார்.

**பொழிப்புரை:** உயிரினைக் கீழான நெறியில் செலுத்தும் ஆணவ மலப் பேய்(தனது சக்தி) கெட மேலான அடியவர்கள் உன்னைப் பூசனை(பூசை) செய்வார்கள்.

**5. மூர்த்திதலந் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர் வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே!**

**பதவுரை:** மூர்த்தி- சிவலிங்கப் பெருமான், முறையால்- முறையே, முறைப்படி, தொடங்குதல்- ஆரம்பித்தல், வார்த்தை- ஒப்பற்ற சித்தாந்த மகாவாக்கியம், சொல்ல- உபதேசிக்க, சற்குரு- நல்ல குரு, ஆசாரியார்.

**பொழிப்புரை:** (யாத்திரை மேற்கொண்டு ஆங்காங்கே உள்ள) சிவலிங்கப் பெருமானையும் புண்ணிய தலங்களையும் தீர்த்தங்களையும் முறையே(தரிசிக்க) ஆரம்பித்து வருபவர்களுக்கு ஒப்பற்ற சித்தாந்த மகாவாக்கியத்தினை உபதேசிப்பதற்கு நல்ல குருவும் வந்து வாய்க்கப் பெறுவர்.

**மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**

1. உங்களுக்குத் தெரிந்த பிற்காலத் தோத்திரப் பாடல் நூல்களைக் குறிப்பிடுக?
2. கந்தபுராணம், ‘உதித்தனன் உலகம் உய்ய’ என எக்கடவுளை குறிப்பிடுகின்றது?
3. கந்தர் அநுபூதியின் இறுதிப் பாடல் எது?
4. மாணவர், கலைமகளின் அருளைப் பெறுவதற்கு பாட வேண்டிய தோத்திரப் பாடல்நூல் எது?
5. அந்தாதி என்றால் என்ன?

## செயற்பாடு

**மேல்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

| தோத்திரப் பாடல் | ஆசிரியர் பெயர் | குறிப்பிடும் விடயம் |
|---|---|---|
| 1 கந்த புராணம் | | |
| 2 திருப்புகழ் | | |
| 3 கந்தர் அநுபூதி | | |
| 4 சகலகலாவல்லி மாலை | | |
| 5 அபிராமிஅந்தாதி | | |
| 6 பராபரக்கண்ணி | | |

02) தரப்பட்ட தோத்திரப் பாடல்களைச் சந்தத்துடனும் இசையுடனும் வகுப்பறையில் பாடுக.

03) தோத்திரப்பாடல்களை அடிமுறை தவறாது எழுதுக. அவற்றின் பொழிப்பையும் எழுதி அவற்றை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- திருமுறைகளுள் அடங்காத இறைவனைப் போற்றிப் பாடும் ஏனைய பாடல்கள் பிற்காலத் தோத்திரப்பாடல்கள் எனப்படும்.

- கந்தபுராணம், திருப்புகழ், கந்தர் அநுபூதி, சகலகலாவல்லிமாலை, அபிராமிஅந்தாதி, பராபரக்கண்ணி முதலியன பிற்காலத் தோத்திரப்பாடல்கள் ஆகும்.

- திருப்புகழ் சந்தத்துடனும், தோத்திரப்பாடல்கள் இசையுடனும் பாடப்பட வேண்டும். தோத்திரப் பாடல்களைப் பக்தியுடன் ஓதினால் இறை அருள் கிடைக்கும்.